# உத்திர சுவாமி மலை
# சுவாமிநாத சுவாமி !

தலை நகர் தனிலே தன்னாட்சி கோல
தரணி போற்றும் அருளாட்சி நல்க -மா
தில்லி **நகரமதின்** குன்றம் நாடி
திகட்டா அழகுடன் தான் நிற்கின்றாய் சுவாமிநாதா !

அப்பனுக்கு பிரணவமோதி திருவேரகம் ஏகினாலும் -நாடு
ஆண்டாருக்கும் அண்டியோருக்கும் யாமிருக்க பயமேன் என
அபயம் அளித்து அருள் பாலிக்கும் ஆறு படைத் தலைவா
ஆறா மனங்களின் ஆறுதலுக்கு ஏழாம் படை கண்ட சுவாமிநாதா!

கரை புரண்ட தாமிரபரணியில் சிலை கொண்டு-பக்தி
உறை **காஞ்சி** முனியின் தவமதில் ஆட்கொண்டு
மறையோதி முனி நோற்ற திருநீற்றபிடேகம் தானேற்று
நிறை கொண்டு தில்லி மலை மந்திர் குடிகொண்ட சுவாமிநாதா !

மலை மந்திர் சுவாமியென வடபுலத்தார் **வணங்கிட**
மலை மகளின் குமரனென தென்புலத்தார் போற்றிடும் சுவாமிநாதா !
மலையடியில் கோலோச்சும் அன்னை மீனாட்சி-வெள்ளி
மலைஉறை சுந்தரேசன் தாள் பற்றி நாடுவோம் உமை சுவாமிநாதா !

கற்பகத்தருவாய் அருளும் கணபதியை துதித்து வலம் வந்து
கல்லாலின் புடையமர்ந்து நான்மறை கண்ட குருவருள் ஈன்று
காஞ்சி,துவாரகை முதல் பூரி ,பதரி ,சிருங்கேரி தொட்டு நாற்திசை
நற் பீடங்களும் நாடித் தொழுத சுவாமிநாதா ! உம் தாள் தொழ
மலை நாடி படியேறி உச்சமடைந்தால் உள்ளம் களவாடும்
மன்னாதி மன்னனாக சகச்ராரமாக வல்லவோ நிற்கின்றாய் சுவாமிநாதா !

கந்தா போற்றி !கதிர்வேலா போற்றி !கடம்பா போற்றி !
கார்த்திகேயா போற்றி ! ஆறுமுகா போற்றி !திருக்குமார போற்றி !
செந்தில் ஆண்டவா போற்றி !சுப்பிரமணியா போற்றி !போற்றி !
எம் பிறவிப் பிணிதீர்த்து பேரருள் புரிய நின் பொற்பாதங்களை
எக்கணமும் பற்றுகின்றோம் தகப்பன் சுவாமியே சுவாமிநாதா!

அன்பன்
தி . சுவாமிநாதன்
**(M) 9013300706**

( குறிப்பு :- 2016 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ஆம் தேதி பங்குனி உத்திரம் ! முருகன் தேவானை தனை மணம் புரிந்த .உத்திரம் நட்சத்திரமும் பௌர்ணமியும் இணையும் நன்னாள் ! இனிய இந்நாளிலேதான் பார்வதி பரமேஸ்வரன் திருகல்யாணமும்,சீதா இராமன் திருகல்யாணமும்,ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார் திருகல்யாணமும் நடைபெற்றதாக புராணங்களின் கூற்று ! ஆறுமுகன் உறையும் ஆறு படை வீடுகளும் ஆறு சக்கரங்களை அடி நாதமாக கொண்டதாகவும்

அவற்றை இணைக்கும்ஏழாம் படையாக சகச்ரார ஆதாரமாகவும் பிரம்மராந்திர கேந்திரமாகவும் இந்திர பிரஸ்தா திகழ்கின்றது என பதிவுகள் கூறுகின்றன !
திருசெந்தூர் -மூலாதாரம் ,திருப்பரங்குன்றம் - ச்வதிஷ்டானம் ,சுவாமி மலை- மணிபூரகம் ,பழநி -அனாஹதம் ,பழமுதிர்சோலை - விசுத்தி ,திருத்தணி -ஆக்யா என படைக்கோர் கேந்திரமாக பதிவுகள் உரைக்கின்றன !)